1983 பிப்ரவரி 4]

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே. இந்த மலைவாழ்படியைக் கொடுப்பதற்கு ஆயிரம் மீட்டர் அளவு என்று சொன்னார்கள். அந்தப் பகுதியிலே வாழும் படியான மக்களுக்குக் கூடுதல் செலவு நிச்சயமாக இருக்கிறது என்று நாம் அறிகிறோம். ஆகவே, இந்த ஆயிரம் மீட்டரைக் குறைத்து, அவர்களுக்குக் கூடுதல்படி கொடுப்பதற்கான ஆலோசனையை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆயிரம் மீட்டருக்கே இன்னும் கொடுக்கவில்லையென்று சொல்கிறார்கள். ஆயிரம் மீட்டரை அதற்குள்ளே ஏன் குறைக்கிறீர்கள்?

மீனளத்துறையில் பெண்களுக்கென்று தனி கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 123—திரு. மெ. ஆண்டிஅம்பலம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனளத் துறையில் பெண்களுக்கென்று தனி கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுவரை எத்தனை சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

(இ) எத்தனை பேர் அங்கத்தினராகச் சேர்க்கப் பட்டுள்ளனர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) மற்றும் (ஆ) இதுவரை மூன்று சங்கங்கள் கீழ்க்கண்ட இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன:

(1) செங்கல்பட்டு மாவட்டம் .. திருச்சினாங் குப்பம்

(2) தஞ்சாவூர் மாவட்டம் .. காரையூர் தெரு

(3) திருநெல்வேலி மாவட்டம் .. தருவைக்குளம்.

(இ) சேர்க்கப்பட்டுள்ள அங்கத்தினர்கள் எண்ணிக்கை பின்வருமாறு;

(1) திருச்சினான்குப்பம்	..	263
(2) காரையூர் தெரு	..	186
(3) தருவைக் குளம்	..	142
மொத்தம்	..	591

TRUTH ALONE TRIUMPHS

*திரு. மெ. ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டில் பழையகாலம் முதல் மீன் பிடிக்கும் தொழில் பிரபலமாக உள்ளது. பல இலட்சக்கணக்கான மக்கள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழ்நாட்டிலேயே அவர்கள் தங்கள் வாழ்க்கைப் பிரச்னையைத் தீர்க்க அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆடவர்கள் கொண்டு வரும் மச்ச மகசூலைப் பக்குவப்படுத்தி மக்களுக்கு உணவு நேரத்திலே கொண்டு செல்வதற்காக வசதி செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தச் சங்கங்கள் அமைக்கவும், அவற்றைச் சிறப்புற நடத்துவதற்கான முயற்சிகளில் சங்கங்களுக்குப் பங்குதொகை ரூ. 15,000—மும் இதர சிலவற்றிற்கு ரூ. 8,000-மும் மற்றும் ஆரம்பச் செலவுகளுக்கு ரூ. 3,000-மும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இந்தச் சங்கங்களினுடைய நடவடிக்கைகளைச் சிறப்பாகவும் செம்மையாகவும் செய்வதற்கு சிலபல வசதி வாய்ப்புகள் செய்ய வேண்டுமென்று அவர்கள் விண்ணப்பிப்பார்களானால் அரசு ஆராய்ந்து அதன்மீது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த 3 கூட்டுறவுச் சங்கங்களும் கடல்வாழ் மீனவப் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதேபோல் உள்நாட்டு மீனவப் பெண்களுடைய நலன் கருதி அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை அவர்களுக்கும் ஆரம்பிக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய சயற்குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும் அல்லது தனி விண்ணப்பம் அளித்தால் அதுபற்றி ஆராயப்படும்.

திரு மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாலையில் சென்று மச்ச மகசூலைக் கொண்டு வந்தாலும் நல்லபடியாக பக்குவப்படுத்தியும் உடனே அங்காடிக்கு எடுத்துச் சென்று மக்களுக்குப் பயன்படும்படி சேர்ப்பது மீனவப் பெண்கள்தாம். அதனால் அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலமாகப் போக்குவரத்து வசதி செய்து தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லையென்று நான் குறிப்பிட்டேன். கூட்டுறவுச் சங்கத்தினுடைய மீன்களை கொண்டு செல்வதற்கு வேறுபல கூட்டுறவுச் சங்கங்களுக்கு அப்படிப்பட்ட வசதிகள் அளிக்கப்படுமானால் அதை இந்தச் சங்கங்களுக்கும் அளிப்பதற்காக முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம், ஆனால், எல்லாச்

1983 பிப்ரவரி 4]

சங்கங்களுக்கும் போக்குவரத்து வசதிகளைச் செய்து தருவதற்கான தன்மைகள் ஒட்டு மொத்தமாக இருக்கிறது என்று பொதுவாகச் சொல்வதற்கில்லை. ஆகவேதான் சங்கங்கள் விண்ணப்பிப்பார்களேயானால், அதை ஆராய்ந்து, அதைச் செய்து தருவதற்கான வசதியும் வாய்ப்பும் இருக்குமேயானால் அதைச் செய்து தருவதற்கு அரசு முயற்சிக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் 3 இடங்களில்தான் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதுபோன்ற கடலோரப் பகுதியான நெல்லை மாவட்டத்தில், உவரி, கூடுதாளை, கூச்சப்பாறை, புன்னக்காயில், தூத்துக்குடி போன்ற பகுதிகளில் அதிகமான மீனவர்கள் இந்தத் தொழிலைச் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் இந்தச் சங்கங்களை ஆரம்பித்து, கருவாடு போன்ற பதனப்பட்ட மீன்களை அவர்கள் பாதுகாத்து தொடர்ந்து விற்பனை செய்வதற்கு அப்படிப்பட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெண்களுக்கு அமைக்கப்படுகின்ற மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுடைய எண்ணிக்கையைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தை தான் இந்த அரசு கொண்டிருக்கிறது. ஆகவே தான் மூன்று இடங்களிலே நாம் பரீட்சார்த்தமாக 1981 ஆம் ஆண்டில் ஆணை பிறப்பித்து நடத்த வேண்டுமென்ற முறையிலே ஏற்பாடுகளைச் செய்து வந்தோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல் பல்வேறு மாவட்டங்களிலே பெண்கள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதினால் பலன் ஏற்படும் என்ற சூழ்நிலை ஏற்படுமானால் அதற்கான முயற்சியை எடுப்பதற்கு முன்வருவார்களானால் அதற்காக சங்கங்களை அமைப்பதற்கும் அதற்கான ஒத்துழைப்பைச் செய்யவும் அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை, செங்கம் வட்டங்களில் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் நகைக் கடன்கள்.

*வினா எண். 124—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இரு வட்டங்களைச் சேர்ந்த நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளும், தனியார் வங்கிகளும், கூட்டுறவு வங்கிகளும் மூன்று. நான்கு மாத காலமாக நகைக்கடன்கள் வழங்குவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?